www.facebook.com / newsplustamil www.newsplus.lk twitter.com/newsplus.lk

# NEWS PLUS

உன்னதமான பயணத்தின் அடையாளம்

30 JANUARY 2023 - MONDAY Pages - 06 E Paper - # 026 / Y 01 / 2023

Web: WWW.NEWSPLUS.LK E-mail: editor@newsplus.lk


## புதிய பணிப்பாளராக பைஸல் ஆப்தீன் பதவியேற்பு

(எம்.கே.எம். அஸ்வர்)

முஸ்லிம் சமய, கலாச்சார திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக பைஸல் ஆப்தீன் (வயது 52)

02 »»

## 8ஆம் திகதி பௌஸி சத்தியப் பிரமாணம்



எதிர்வரும் 08 ஆம் திகதி பாராளு மன்றம் கூடும்போது கொழும்ப

02 »»

# 13 இற்கான பொது ஆவணத்தை தயாரிக்க முஸ்லிம் தலைமைகள் ஒன்றுபட வேண்டும்

### முஸ்லிம் சிவில் சமூக பிரதிநிதிகள் கோரிக்கை







(சுஐப்,எம்,காசிம்)

தேர்தல் கால வேறுபாடுகளைக் களைந்து பொதுவான ஆவணம் ஒன்றைத் தயாரிக்க முஸ்லிம் கட்சிகள் ஒன்றுபட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தலைமைகளை ஒன்றுபடுத்து ம் பணிகளுக்கு யார்,தலைமையேற் பது

02 »»

# அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் தேர்தல் பணிகள் தொடரும்

### ஆணைக்குழு தலைவர் திட்டவட்டம்

## பஸிலின் அமெரிக்க சொத்துக்களை பகிரங்கப்படுத்துவோம்



### விமல்வீரவன்ஸ எச்சரிக்கை

மொட்டுக் கட்சிக்குள் பிளவுகள் மும்முரமடைந்துள்ள நிலையில் கட்சியிலிருந்து வெளியேறிய விமல் விரவன்ச தற்போது பசில் ராஜபக்ஷவுக்கு எதிராக பல்வேறு சவால்களை விடுத்துள்ளார்.

பசில் ராஜபக்ஷவின் பெயரில் அமெரிக்காவில் இருக்கும் சொத்து விபரங்களை வெளியிடப் போவதாக அவர் அச்சுறுத்தல் விடுத்துள்ளார். இன்னும் சில தினங்களில் இந்த விபரங்களை பகிரங்கப்படுத்தவதாக அவர் தெரிவித்துள்ளார்.

## அரசின் சதி அம்பலம்

### ஹக்கீம், முஜிபுர் ரஹ்மான் குற்றச்சாட்டு

குழுவின் அங்கத்தவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்துள்ள நிலையிலும் தமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளைத் தொடர்வதற்கு தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழு அங்கத்தவர்களான எம்.எம். முஹம்மட், எஸ்.பி. திவாரத்ன, ஜே.வி.பி. பதிரன ஆகியோருக்கு கடந்த சில தினங்களாக தொலைபேசி மூலம் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வரலாற்றிலே இவ்வாறாக தேர்தல் ஆணைக்குழு அங்கத்தவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

தேர்தல் ஆணைக்குழுவை இயங்க விடாமல் தடுத்து, தேர்தலை ஒத்திப் போடுவதற்காக சதியில் அரசு தரப்பினர் ஈடுபட்டிருப்பதாக இது தொடர்பாக கருத்து தெரிவித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். ஜனநாயகத்திற்கு விடுக்கப்பட்ட ஒரு பெரும் சவால் என அவர் இதனை வர்ணித்தார். இலங்கை அரசியல் வரலாற்றில் இப்படியான ஒரு அச்சுறுத்தலை நாம் கண்டதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம் தேர்தல் ஆணைக்குழுவின் அங்கத்தவர் திருமதி சார்ல்ஸை பதவியில் இருந்து விலகச் செய்வதில் பின்னணியில் ஒரு சதி இடம் பெற்று இருப்பதாக கொழும்பு மாநகர சபை

02 »»

## 13ஐ ஒழிக்க இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது

### சம்பந்தன் நம்பிக்கை



"அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது. அந்தச் சட்டத்தை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்தியே ஆக வேண்டும். இந்த நிலைப்பாட்டில் இந்தியா உறுதியாக உள்ளது."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

02 »»

## 13ஐ ஒழிப்பதே ஒரே வழி அது இந்த நாட்டின் சாபக்கேடு

### புலம்புகிறார் சரத் வீரசேகர



அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக இல்லாதொழிப்பதே ஒரே வழியாகும் என்று ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

"13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அப்படிச் செய்யாமல் இருக்கவேண்டுமானால் யாராவது 22ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்து 13ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்யவேண்டும். இந்த இரண்டில்

02 »»

## ஈஸ்டர் தாக்குதலில் சம்பந்தப்பட்டோருக்கு கண்டிப்பாக தண்டனை வழங்குவோம்

### குருநாகல் பொதுக் கூட்டத்தில் சஜித் எச்சரிக்கை



திருடர்கள் தண்டிக்கப்படுவார்கள் என சிலர் சொல்கிறார்கள் எனவும்,அவ்வாறு சொல்லும் தரப்பினர் அதனை எவ்வாறு நிறைவேற்றுவதென சொல்வதில்லை எனவும்,இதனை நிறைவேற்றுவதற்கு

02 »»

## துருக்கி வேலை வாய்ப்புத் தேர்வின் உண்மை நிலை என்ன?

### ஏற்பாட்டாளர்கள் விளக்கம்

(அஸீம் கிலாப்தீன்)

நேர்முகத் தேர்வை ஏற்பாடு செய்து 1500 பேரை துருக்கி நாட்டுக்கு வேலைக்காக அனுப்புவாதக்காக ஏற்பாடுகளை செய்து இருக்கும் வேளை அதனை குழப்புவதகாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு சங்கத்தின் தலைவர் உட்பட பலர் முயச்சி செய்த போதே இந்த பதற்றமான சூழல் உருவானதாக பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரகுமானின் ஊடக செயளாளரும் நேர்முகத் தேர்வை ஏற்பாடு செய்தவருமான மித்துன் கான் தெரிவித்தார்.

02 »»

## மின்வெட்டு தொடர்ந்தால் இன்று முதல் சட்டநடவடிக்கை

### ஆணைக்குழு ஜனக ரத்னாயக்க

சுயாதீன ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட தீர்மானத்தை அதிகாரிகள் அமுல்படுத்தாமை தொடர்பில் நாளை (30) முதல் சட்ட

02 »»

## 8ஆம் திகதி

( முன்பக்கத் தொடர்ச்சி...)

மாவட்ட பாராளுமன்ற உறப்பினராக அல்ஹாஜ்.ஏ.எச்.எம். பௌசி சபாநாயகர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்யவுள்ளார்.

முஜிபுர் ரஹ்மான் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்ததையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே மூத்த முஸ்லிம் தலைவரான பௌசி நியமனம் பெற்றுள்ளார். கடந்த பொதுத் தேர்தலில் பௌசி ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்டபோதும் உரிய வாக்குகள் கிடைக்காததால் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகவில்லை. பட்டியலில் அடுத்து அவருடைய பெயரே இருந்தது. அவருடைய பெயர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கிறது

**வாசகர்களே!**

**இப்பத்திரிகை குறித்தான உங்களது நேர்த்தியான கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றது.**
**உங்களது கருத்துக்கள் மற்றும் செய்திகளை கீழுள்ள மின்னஞ்சல் முகவரியூடாக அனுப்பி வைக்கவும்.**

**editor@newsplus.lk**

# சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசலில் “புனித புஹாரி செரீப்“ பாராயணம் ஆரம்பம்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது ஜு/ம்ஆ பெரிய பள்ளிவாசலில் பாரம்பரியமாக இடம்பெற்றுவரும் “புனித புஹாரி செரீப்“ பாராயணம் (25) புதன்கிழமை அதிகாலை இப்பள்ளிவாசலின் பேஷ் இமாம் எம்.ஐ. ஆதம்பாவா (ரஷாதி) யினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜு/ம்ஆப் பெரிய பள்ளிவாசல் பொறுப்பாளர் சபையின் தலைவர் ஏ. ஹிபத்துல் கரீம் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்நிகழ்வில், சாய்ந்தமருது - மாளிகைக்காடு பள்ளிவாசல் மரைக்காயர்மார்கள், பொறுப்பாளர்கள், புஹாரி மஜ்லிஸ் குழுவினர், நிர்வாகிகள், ஜமாஅத்தினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இந்தப் புனித “புஹாரி செரீப்“ பாராயண நிகழ்வு சுமார் ஒரு மாத காலம் (30 நாட்கள்) ஒவ்வொரு நாளும் அதிகாலை வேளையில் இப்பள்ளிவாசலில் இடம்பெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இதில் பங்கு கொண்டு தங்களது பங்களிப்புகளைச் செய்ய விரும்புபவர்கள் பள்ளிவாசலில் தொலைபேசி இலக்கமான 0672229020 என்ற எண்ணுடனோ அல்லது பள்ளிவாசல் காரியாலயத்துடனோ தொடர்பு கொண்டு பங்களிப்புகளை வழங்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 13 ஐ ஒழிக்க

( முன்பக்கத் தொடர்ச்சி...)

”13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த அனுமதிக்க மாட்டோம் எனவும், அந்தச் சட்டத்தை முற்றாக இல்லாதொழிக்க வேண்டும் எனவும் இனவாதிகளான விமல் வீரவன்ச, சரத் வீரசேகர கூறும் கருத்துக்களைக் குப்பையில் தூக்கி வீச வேண்டும். அவர்களின் விசமத்தனமான கருத்துக்கள் இப்போது வேகாது” - என்றும் சம்பந்தன் பதிலடி கொடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

”13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை அண்மையில் இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்,ஜெய்சங்கர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்திவிட்டு சென்றுள்ளார். எம்முடன் ஜெய்சங்கர் நடத்திய பேச்சின் போதும் இந்தியாவின் நிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துரைத்தார்.

ஜெய்சங்கரின் பயணத்தின் பின்னர் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டிய ஜனாதிபதி, தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பேன் என்று கூறியுள்ளார். ஜனாதிபதி வாயால் மாத்திரம் கருத்துக்களை வெளியிடாமல் அதனைச் செயலிலும் காட்டவேண்டும்” - என்றார்.

## 13 ஐ ஒழிப்பதே

( முன்பக்கத் தொடர்ச்சி...)

ஒன்று நடக்க வேண்டும்”- என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நடத்திய சர்வகட்சிக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார். ஜனாதிபதியின் இந்தக் கருத்து தொடர்பில் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட “மொட்டு“வின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவிடம் வினவியபோது அவர் தெரிவித்ததாவது:-

”13 ஆவது திருத்தம் இலங்கையின் அரசமைப்புக்கு ஒரு சாபக்கேடான சட்டமாகும். இந்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியது போல் அதை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுத்தால் எமது முழுமையான ஆதரவை வழங்குவோம். ஏனெனில் சிக்கலுக்குரிய 13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக இல்லாதொழிப்பதே ஒரே வழியாகும்” - என்றார்.

## 13 இற்கான...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

என்ற சிக்கல்கள் எழுந்துள்ள நிலையிலுங்கூட,முஸ்லிம் சிவில் சமூகத்தினர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.சர்வகட்சிக் கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவித்த 13 ஐ அமுல்படுத்தும் தேவை குறித்த கருத்துக்களில்,முஸ்லிம் தலைமைகள் தீவிர கவனமெடுத்து,சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும் என்றும் அந்தக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.அதிகரித்து வரும் இந்தியா வின் அழுத்தம் மற்றும் பொருளாதார நெருக்கடித் தீர்வுக்கு சர்வதேசத்தை நாட வேண்டியுள்ள நிலைமைகளே, ஜனாதிபதியின் இம்முடிவுக்கு காரண மாகியுள்ளது. எனவே,சர்வதேச மயப்ப டவுள்ள இந்தப்பிரச்சினையில்,முஸ்லிம்களுக்குள்ள பொறுப்புக்கள் வெளிக்கொணரப்படல் அவசியம்.இம் முக்கிய தருணத்தில்,முஸ்லிம் தலைமைகள் அக்கறையற்றிருந்தா ல்,தேசிய இனப்பிரச்சினையில் முஸ்லிம்களுக்கு எதுவும் அவசியம் இல்லை என்ற கருத்தையே தோற்றுவிக்கும். ஆகவே,அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துகையில்,முஸ்லிம்கள் தொடர்பில் அவதானிக்கப்பட வேண்டியவை குறித்த ஆலோசனைகள் அடங்கிய பொது ஆவணத்தை தயாரிக்க முஸ்லிம் தலைமைகள் ஒன்றுபட வேண்டும் என்ற கோரிக்கையை முஸ்லிம் சிவில் சமூகத்தினர் விடுத்துள்ளனர்.

## புதிய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இன்று (30 ) பதவியேற்கவுள்ளார்.

முஸ்லிம் சமய, கலாச்சார திணைக்களத்தின் கடந்த ஒன்றரை வருடகாலமாக பதவி வகித்த இப்ராஹிம் அன்சார் அவர்கள் சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி ஓய்வு பெற்றதின் பின் ஏற்பட்ட வெற்றிடத்திற்கே இவர் நியமிக்கப்பட்ருக்கிறார்.

இலங்கை நிர்வாக சேவை முதற் தர அதிகாரியான இவர் பேராதெனிய பல்கலைக்கழகத்தின் உயிரியல் துறை பட்டதாரியாவார்.

கமநல சேவை திணைக்களத்தின் உதவி ஆணையாளராக நான்கு ஆண்டுகளும், ஆணையாளராக இரண்டு ஆண்டுகளும் பதவி வகித்ததோடு கேகல்ல மாவட்டத்தின் ருவன்வெல்ல, கலிகமுவ பிரதேச செயலகங்களில் உதவிச்செயலாளராகவும், அரநாயக்க பிரதேச செயலாளராக ஏழு ஆண்டுகளுக்கு மேல் சேவையாற்றிய தேர்ச்சிமிக அனுபவங்களை கொண்ட பைசல் 0 ஆப்தீன் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

அரநாயக்க தல்கஸ்பிட்டிய முஸ்லிம் மகா வித்தியாலயம், அரநாயக்க திப்பிட்டிய முஸ்லிம் மகா வித்தியாலயம் இமாவனெல்ல சாஹிரா கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் ஓய்வுபெற்ற அதிபர் மர்ஹூம் எம்.யு.இசட்.ஆப்தீன, ஓய்வுபெற்ற ஆசிரியை மர்ஹூமா நபீஸா தம்பதிகளின் புதல்வாருமாவார்.

## அச்சுறுத்தல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முதன்மை வேட்பாளர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தின் ஊடகப் பிரிவே இந்த சதியின் பின்னணியில் இருப்பதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

திருமதி சார்ல்ஸின் செயற்பாடுகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து அவர் செய்த நடவடிக்கைகளுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் சில தரப்பினர் தெரிவித்துள்ளனர். இது சம்பந்தமாக சட்ட ஆலோசனை பெற்று வருவதாக ஜனநாயகத்தை ஆதரிக்கும் குழு ஒன்று தெரிவித்தது.

## துருக்கி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நான் என்னுடனுடன் கதைத்த அனைவருக்குக்கும் வெளிநாடு செல்வத்துக்கு 500,000 ரூபா செலவாகும் எனவும் அதனை தேசிய சேமிப்பு வங்கி ஊடாக கடனாக பெற்று தரப்படும் எனவும் தெளிவாக தெரிவித்தாக கூரினார்

வியாபார போட்டியே இதற்கு காரணம் எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சங்கத்தின் தலைவர் உள்ளிட்ட குழு வராமல் இருந்தால் துருக்கி நாட்டவர் வருகை தந்து இந்த நேர்முக தேர்வு இடம்பெற்று இருக்கும் எனவும் இது தொடர்பான விசாரணை மற்றும் வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் இரவு 9.30 மணியளவில் பொலிஸ் நிலையத்தில் இருந்து வெளியேரியதாகவும் அவர் தெரிவித்தார்

பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரகுமானின் கருத்து

துருக்கி நாட்டில் அதிகப்படியாக வேலைவாய்ப்புகள் உள்ளது என்பது உண்மை நாம் இந்த சந்தர்ப்பத்தை சரியாக பயன் படுத்த வேண்டும். கடன் அடிப்படையில் தேசிய சேமிப்பு வங்கி ஊடாக வெளிநாடு செல்ல தேவையான பணம் கிடைக்கும் எனவே அதனை மாதாந்த அடிப்படையில் செலுத்த முடியும் இந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் என்னுடைய நெருங்கிய நண்பர் ஏன்று தெரிவித்தார்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் கருத்து

“துருக்கியில் சில வேலை வாய்ப்புகள் உள்ளன, ஆனால் அவை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும். இந்த வகையான போலி வேலை மோசடிகளுக்கு இரையாவதை விட, எங்கள் அதிகாரப்பூர்வ சேனல்களைப் பின்பற்றுமாறு வேலை தேடுபவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்” என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், கொழும்பில் உள்ள துருக்கிய தூதரகம், தூதரகமோ அல்லது துருக்கிய உள்துறை அமைச்சகமோ மனிதவள ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாகவோ அல்லது தொடர்புடையதாகவோ இல்லை என்று கூறியுள்ளது.

“இலங்கையில் துருக்கிய ஆட்சேர்ப்பு செய்து வருவதாக சமூக ஊடகங்களில் சில தவறான தகவல்கள் பரப்பப்பட்டு வருவதாக தூதரகத்தின் உடனடி கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. கொழும்பில் உள்ள துருக்கிய தூதரகத்திற்கோ அல்லது துருக்கிய உள்துறை அமைச்சகத்திற்கோ இது போன்ற ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுடன் தொடர்பில்லை, இது சில தனிப்பட்ட நபர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது” என்று துருக்கிய தூதரகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஒரு சமூக ஊடகப் பதிவைப் பார்த்து, துருக்கிய வேலைக்கான இலவச நேர்காணலுக்காக இலங்கை முழுவதிலும் இருந்து கிட்டத்தட்ட 1000 நபர்கள் கொழும்புக்குச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஈஸ்டர்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முறைமையொன்றினை ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தீர்வற்ற நாட்டிற்கு தீர்வு எனும் கருப்பொருளில் குருணாகல் சத்தியவாதி மைதானத்தில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் முதலாவது தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.இதில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்கள் உட்பட இலட்சக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

ஈஸ்டர் தாக்குதலில் ஈடுபட்ட அனைவருக்கும் எதிராக சட்டம் அமுல்படுத்தப்படும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,இதில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புடைய எவரையும் தப்பிக்க இடமளிக்க மாட்டோம் எனவும் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதலுடன் எவ்வகையிலேனும் தொடர்புடைய எவருடனும் அரசியல் பயணம் இல்லை என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,எந்த சூழ்நிலையிலும் எந்த சந்தர்ப்பத்திலும் அவர்களை ஆட்சியில் ஈடுபடுத்த மாட்டோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இன்று கடைத்தெருக்களுக்கு வரும் சில குழுக்கள் அவர்களும் ஒரே மாதிரியானவர்கள் இவர்களும் ஒரே மாதிரியானவர்கள் என்று கூறிக்கொண்டு தாம் வேறு என காட்ட முயலும் சில குழுக்கள் தமது வரலாற்றை மறந்து விட்டதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கத்தில் முதல் தடவையாக அமைச்சரவை அமைச்சர்களாகவும் பிரதி அமைச்சர்களாகவும் இவர்களே பதவியேற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இத்துடன் நின்றுவிடாது இந்நாட்டை வங்குரோத்தாக்கிய ராஜபக்சர்களை ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு முன்னோடியான பக்க பலத்தை வழங்கியவர்கள் இவர்களே என தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர்,இந்த பாவத்தில் இருந்து தப்பித்துக்கொள்ள அவர்களால் ஒருபோதும் முடியாது எனவும் தெரிவித்தார்.

வரலாற்றில் முதன்முறையாக ஐக்கிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி பிரதிநிதிகள் நியமனமாவார்கள் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,அவர்களில் எவருக்கும் மோசடி மற்றும் ஊழல்களை செய்வதற்கு இடமளிக்க மாட்டோம் எனவும் தெரிவித்தார்.

ஒழுக்கக் கோவையை அவர்களுக்கு அறிமுகப்படுத்தவுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,நாடு முழுவதிலும் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளும் மக்கள் சேவைக்கான இடைவிடாத உள்ளூராட்சி சபைகளாக மாற்றப்படும் எனவும் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபையின் தலைவர் அல்லது உப தலைவர் இணைந்து சட்டவிரோத கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள அனுமதிக்காத வகையில் அனைத்து கிராமங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மேற்பார்வை சபையொன்று நியமிக்கப்படும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,இதற்கு இளைஞர் பிரதிநிதிகள் நியமிக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்தார்.

உலகில் உள்ளூராட்சி கட்டமைப்பை நிறுவிய நாடுகளுடன் நட்புறவு ரீதியான உள்ளூராட்சி மன்ற நிர்வாக திட்டமொன்றை ஸ்தாபித்தல், ஒவ்வொரு கணமும் மக்கள் நலனுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் உள்ளூராட்சி கட்டமைப்புகளை உருவாக்குவதே தனது ஒரே நோக்கமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

## மின்வெட்டு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இன்று (29) மாலை விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடாத்திய அவர், சுயாதீன ஆணைக்குழுவின் பணி சுயாதீனமாக செயற்படுவதே தவிர அரசியல் அதிகாரத்தின் தீர்மானங்களை அமுல்படுத்துவதல்ல என தெரிவித்தார்.






தெமட்டகொடையில் இயங்கி வரும் Sun Flower Skills Academy இன் Graduation Ceremony சனியன்று (28) BMICH Lotus Auditorium இல் இடம்பெற்றது. காலையில் இடம்பெற்ற முதலாவது நிகழ்வில் பிரதம அதிதியாக சமூக நல செயற்பாட்டாளர், தொழிலதிபர் டொக்டர் எம்.ஏ.சி.மஹ்சூம் அவர்களும் விஷேட அதிதிகளாக கொழும்பு சென் செபஸ்டியன் கல்லூரி அதிபர் சஹ்லின், மாளிகாவத்தை தாருஸ் ஸலாம் கல்லூரி பதில் அதிபர் ஏ.எம்.ஹஸீன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தாறுத் தக்வாவின் 5வது பட்டமளிப்பு விழா



(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

மட்டக்குளி முகத்துவாரம் தாறுத் தக்வா மத்ரஸாவின் 5வது வருடாந்த பரிசளிப்பு விழாவும் பட்டமளிப்பு விழாவும் நேற்று முன்தினம் சனிக்கிழமை மத்ரஸாவின் பணிப்பாளர் அல்-ஹாபிஸ் யுஸ்ரி சுபைர் தலைமையில் கொழும்பு-03 இல் உள்ள பிஸப்ஸ் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் சிறப்பாக இடம் பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதிகளாக அல்-ஹாபிஸ் அல்-ஆலிம் எம்.ஜே. எம். முஸ்தஜாப் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் திருமதி எம்.ஜே.பாத்திமா ரினூ சியவும் கலந்து கொண்டனர். கௌரவ அதிதிகளாக வைத்தியர் பாத்திமா அப்ரா அத்தீக் அஸ்லம் எம்.ஏ.அஸ்லம்இ மற்றும் உலமாக்கள், புத்தி ஜீவிகள், கல்விமான்கள்இ நலன் விரும்பிகள் பொது மக்கள் என பெருமளவானர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது குர்ஆன் தஸ்வீத் கிராஅத், அல்குர்ஆன் மனனம், துஆ ஓதுதல், கதீஸ் போட்டி, இஸ்லாமிய பொது அறிவுப் போட்டி, தஜ்வீத் எழுத்தறிவு போட்டி என ஆறு பிரிவுகளாக மாணவர்களுக்கு இடையில் நடாத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு அதிதிகளால் சான்றிதழ்கள்இ நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் மத்தரஸாவின் மூன்று மாணவிகள் க.பொ.த உயர் தரத்தில் 3ஏ சித்தி பெற்றமைக்காக அவர்களும் நினைவுச்சினம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை புனித அல்-குர்ஆனை மனனம் செய்த 10 மாணவிகளுக்கும் இரண்டு மாணவர்களுக்குமாக 12 பேருக்கு ஹபிழா மற்றும் ஹாபிழ் பட்டங்கள் வழங்கி கௌவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

இதன்போது மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் சில இஸ்லாமிய நிகழ்வுகளும் இடம் பெற்றன.



கொழும்பு மாவட்டப் பள்ளி வாசல்கள் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் அண்மையில் முஸ்லிம் கவுன்சில் ஓப் ஸிரிலங்காவின் பிரதிநிதிகளை சந்தித்து எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ள செயற்திட்டங்கள் பற்றி கலந்துரையாடினர், சம்மேளனத்தின் தலைவர் சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் கவுன்சில் தலைவர் என் எம்.அமீனிடம் சம்மேளனத்தின் மூன்று வருடகால வேலைத் திட்டத்தை கையளித்தபோதூ எடுக்கப்பட்ட படம்.








மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரியின் மாணவத் தலைவர்களுக்கான ஒருநாள் தலைமைத்துவ பயிற்சி பாசறை கல்லூரி அதிபர் ஏ. எல். ஏ.ரஹ்மான் அவர்களின் வழிகாட்டுதலில், ஒழுக்காற்று உப அதிபர் யூ.மஃபூப் உடையார் அவர்களின் தலைமையில் எம். ரியாஸ் ஆசிரியரின் ஒத்துழைப்போடு கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இதில் உளவள ஆலோசகர் எம். டி.எம்.ஹாசிம் அவர்கள் இவ் நிகழ்வில், மாணவத் தலைவர்களுக்கான பொறுப்புகளும் கடமைகளும், தலைமைத்துவ போக்கும் சவால்களும், தலைமைத்துவம், நேரமு காமைத்துவம், போன்ற பயிற்சி செயல்முறைகளையும், வழங்கி சிறப்பாக வழி நடத்தியமையை இங்கு காணலாம். (ஓமர் பாரா – அரநாயக்க நிருபர்)






# 2 வருடங்களின் பின் பஸால் விடுதலை



இரண்டு வருட காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் செயற்பாட்டாளர் பஸால் கடந்த வாரம் விடுவிக்கப்பட்டார். பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைப்பிடிக்கப்பட்டிருந்த பஸால் சாதரண சட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கைது செய்வதற்கு ஒருவருடத்துக்கு முன் இவருடைய மனைவி காலமானதையடுத்து 9 வயது மகன் இவரது அரவனைப்பிலேயே வளர்ந்து வந்தார். இரு வருடங்களின் பின் தனது மகனோடு இணைந்துள்ளார்.

மனித உரிமைகள் செயற்பாட்டானர் முஹீட் ஜீரான் இவரது விடுதலைக்காக பாடுபட்டுள்ளார் என்பதும் குறிப்பிட்டத்தக்கது.

# அரங்கம்

### தேர்தல் பிரச்சாரங்களில் ரணில் கலந்து கொள்ளப் போவதில்லை என அறிவிப்பு

உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுமா இல்லையா என்ற வாதப் பிரதிவாதங்களுடன் இவ்வார அரசியல் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் இன்னும் பிரச்சார வேலைகள் மும்முரமாக ஆரம்பிக்கப்படவில்லை. காரணம் இது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றுக்கான தீர்ப்பு அடுத்த சில தினங்களில் வழங்கப்படவிருப்பதால் எல்லோரும் அந்தத் தீர்ப்புக்காக காத்திரக்கிறார்கள்.

எவ்வாறான போதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் சம்பந்தப்படாத போதும் தேர்தலை ஒத்திவைப்பது சம்பந்தமாக தெளிவாக எதனையும் இதுவரை கூறவில்லை. தனது கட்சி ஆதரவாளர்களை சந்தித்தபோது, தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கேட்டுள்ளார். அதனை மிகவும் கவனமாக மேற்கொள்ளுமாறும் ஆதரவாளர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளதுடன், தான் தேர்தல் பிரச்சாரங்களில் பங்குபற்றுவதில்லையெனவும் அறிவித்துள்ளார்.

### ஐ.ம.ச பிரச்சார வேலைகள் ஆரம்பம்

ஐக்கிய மக்கள் சக்தி அதன் பிரச்சார வேலைகளை ஞாயிறன்று ஆரம்பித்துள்ளது. நாடளாவிய ரீதியில் கூட்டங்களை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது. கொழும்புக் கூட்டங்களில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கலந்து கொள்வதற்கும் தீர்மானித்திருக்கிறார். தமிழ், முஸ்லிம் கட்சிகளும் தமது பிரச்சார வேலைகளை இன்னும் மும்முரமாக ஆரம்பிக்காத போதும் அதற்கான முன்னேற்பாடுகளை செய்து வருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

### முஸ்லிம் அபேட்சகர்களின் பெயர்கள் நீக்கப்பட்டது குறித்து இம்தியாஸ் அதிருப்தியில்

## முஸ்லிம் அபேட்சகர்களின் பெயர்கள் நீக்கப்பட்டது குறித்து இம்தியாஸ் அதிருப்தியில்

ஐக்கிய மக்கள் சக்திக்குள் அதன் முக்கிய தலைவர்களில் ஒருவரான இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் அதிருப்தியுடன் காணப்படுவதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

பேருவளை நகரசபைக்கு போட்டியிடுவதற்கு அதன் முன்னாள் மேயர் மஸாஹிம் மொஹமட்டை உள்வாங்கியிருந்த நிலையில் கடைசி நேரத்தில் இம்தியாஸுக்கும் தெரியாமல் கட்சிக்குள் அவருடைய பெயர் நீக்கப்பட்டிருப்பது குறித்து இம்தியாஸ் பெரும் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இம்தியாஸ் கட்சியின் தேர்தல் தொடர்பில் ஆராயும் குழுக் கூட்டத்தில் அதிருப்தி தெரிவித்துள்ளார். தனக்கு அளித்த வாக்குறுதியை மீறி கட்சி கடைசி நேரத்தில் மஸாஹிமின் பெயர் நீக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் என்னை எதிர்பார்க்க வேண்டாமென தெரிவித்திருக்கின்றார். இம்தியாஸின் இந்த அறிவிப்பு அக்கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இம்தியாஸின் மற்றொரு நெருங்கிய நண்பரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஷாம் நவாஸின் பெயரும் கொழும்பு மாநகர பட்டியலில் இருந்து கடைசி நேரத்தில் நீக்கப்பட்டுள்ளது. கொழும்பு மாநகர பட்டியல் அபேட்சகராக ஷாம் நவாஸை போட்டியிடுவதற்கு இடமளிப்பதாக வாக்களிக்கப்பட்டிருந்தது. கடைசி நேரத்திலே ஷாம் நவாஸின் பெயரும் நீக்கப்பட்டிருக்கிறது.

முஜிபுர் ரஹ்மானுக்கும் ஷாம் நவாஸுக்கும் இடையில் இருக்கும் அதிருப்தி காரணமாக பெயர் நீக்கப்பட்டதா என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. இதுகுறித்தும் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் அதிர்ச்சியடைந்திருப்பதுடன், முஜிபுர் ரஹ்மான் போன்றொருவர் தனக்கு ஏன் இப்படி செய்ய வேண்டுமென்று கேள்வி எழுப்பியிருக்கிறார்.

### ஆணைக்குழுத் தலைவர் விலகியதாக போலி ஊடக அறிக்கை

தேர்தல் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கு டுபாயிலிருந்து மரண அச்சுறுத்தல்

உள்ளூராட்சித் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட போதும் தேர்தலுக்கான பிரச்சார வேலைகள் மந்த கதியிலேயே நடப்பதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. நாட்டில் பொருளாதார நிலைமையை கருத்திற் கொண்டு தேர்தலை நடத்தக் கூடாதென தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை முடிவு என்னவாக அமையப் போகும் என்ற கேள்விக்குறிக்கு மத்தியில் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும், சுயேற்கைச் குழுக்களும் இன்னும் தமது விரிவான பிரச்சார நடவடிக்கைகளை ஆரம்பிக்கவில்லை. சிறிய மட்டத்தில் பிரச்சாரரங்கள் இடம்பெற்று வருகின்றன. எதிர்வரும் 10 ஆம் திகதி வழக்கு விசாரணை இடம்பெற இருப்பதாவும், 10 ஆம் திகதிக்குப் பிறகே தேர்தல் சூடு பிடிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேநேரம் தேர்தலை நடாத்தாமல் இருப்பதற்கு பல்வேறு உத்திகள் கையாளப்படுகின்றன. தேர்தல் ஆணைக்குழு அங்கத்தவர்களுக்கு அச்சுறுத்தல்கள் விடப்பட்டுள்ளன. தேர்தல் ஆணைக்குழுவின் அங்கத்தவராக இருக்கும் திருமதி சார்ல்ஸ் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். தமிழ் உறுப்பினரான சார்ல்ஸ் அரசுக்கு சாதகமாக செயற்படுவதாக வதந்திகள் பரவுகின்றன.

சார்ல்ஸ் விலகுவதற்கு முன் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து விலகி விட்டதாக போலி ஊடக அறிக்கையொன்று ஊடகங்களுக்கு விடுக்கப்பட்டிருந்தது. இந்த ஊடக அறிக்கை போலியானது என தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜனாதிபதி ஊடகப் பிரிவில் பணிபுரியும் ஒரு ஊடகவியலாளரே இந்த அறிக்கையை வெளியிட்டதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தமது பதவியிலிருந்து இராஜினாமாச் செய்திருப்பதாக வெளிவந்த அறிக்கையையடுத்து உடனடியாக புஞ்சிஹேவாவை தொடர்பு கொண்ட ஊடகவியலாளர்கள் அது பற்றி விபரம் கேட்டுள்ளனர். தான் அவ்வாறு இராஜினாமாச் செய்யவில்லையென்று அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பிரதானி தனுஷ்க ராமநாயக்கிடம் கேட்ட போது, ஆணைக்குழுவின் தலைவர் ஜனாதிபதிழக்கு இராஜினாமாக் கடிததத்தை சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்துள்ளார். அந்த முதல் முயற்சி தோல்வியானதையடுத்து ஆணைக்குழுவின் அங்கத்தவர் பி.எஸ்.எம்.சார்லஸ் இராஜினாமாக் கடிததத்தை ஜனாதிபதிக்கு சமரல்ப்பித்திருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். ஜனவரி 25 ஆம் திகதி திருமதி சார்லஸ் இராஜினாமா செய்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சார்ல்ஸிடம் வினவ முற்பட்டபோதும் அவருடைய தொலைபேசி இயங்காதுள்ளது.

இதேநேரம் தேர்தல் ஆணைக்குழுவின் அங்கத்தவராக இருக்கும் எம்.எம்.மொஹமட் மற்றும் மேலும் சிலருக்கு தொலைபேசியில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இராஜினாமாச் செய்யாவிட்டால் கொலை செய்வதாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து மொஹமட் வசிக்கும் கஹட்டோவிட்டவிலுள்ள அவரது வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. டுபாயிலிருந்து இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. முஹம்மட்டும், ஏனைய உறுப்பினர்களும் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் இவர்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு பொலிஸாருக்கு விடுத்த வேண்டுகோளையடுத்து இவர்களது வீடுகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

### சார்ல்ஸின் இராஜினாவால் பரபரப்பு

திருமதி சார்லஸ் தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து இராஜினாமாச் செய்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சிறுபான்மையினப் பெண்மணியொருவர் இவ்வாறு செயற்பட்டது குறித்து பரவலாகப் பேசப்படுகின்றது. சார்ல்ஸ் விலகியதையடுத்து, புதிதாக அரசியல் யாப்பின் படி ஆணைக்குழுவுக்கு புதிதாக ஒருவரை நியமிக்கும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தாலும் அவ்வாறான எவ்வித தேவையும் இருக்கவில்லை எனத் தெரிவிக்ககப்படுகின்றது.

நிறைவேற்றப்பட்ட 21 ஆவது அரசியல் யாப்பு அமுலாகும் தினத்திலிருந்து அதற்கு முன் பராளுமன்ற பேரவையினால் நியமிக்கப்பட்ட தேர்தல் ஆணைக்குழு உட்பட சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர் மற்றும் அங்கத்துவப் பதவிக்காலம் முடிவடைவதாக குறிப்பிட்டிருந்தாலும் அதில் மேலதிகமாக குறிப்பிடப்பட்டிருப்பது மீண்டும் உருவாக்கப்படும் அரசியலமைப்பு சபை மூலம் சுதந்திர ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் நியமிக்கப்படும் வரை அதன் தலைவர் மற்றும் அங்கத்தவர்களுக்கு பதவி வகிக்க முடியுமென்பதாகும். அதன்படி தற்போதுள்ள அங்கத்தவர்களுக்கு தொடர்ந்து பதவியிலிருக்க முடியுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### முஸ்லிம் காங்கிரஸிக்கு மூன்று பிரதித் தலைவர்கள் நியமனம்

முன்னாள் கிழக்கு மாகாண ஆளுனர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு உள்வாங்கப்பட்டுள்ளதையடுத்து கட்சிக்குள் முன்பிருந்தவர்கள் மத்தியிலே வகிக்கும் பதவி தொடர்பாக அதிருப்தி நிலவுகின்றது. கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் இந்த அதிருப்தியைப் போக்குவதற்காக கட்சிக்கு மூன்று பிரதித் தலைவர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார். திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ், முன்னாள் ஆளுநர் எம்.எல்.எ.எம்.ஹிஸ்புல்லா, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் நயீமுல்லா ஆகியோரை கட்சியின் பிரதித் தலைவராக நியமிக்க கட்சியின் அரசியல் உயர்பீடம் தீர்மானித்துள்ளது.

இவ்வாறான தீர்மானங்கள் யாப்பு மூலமே செய்யப்படவேண்டும்.

வருடாந்த மகாநாட்டில் இதற்கான அங்கீகாரம் பெறுவது என்ற இணக்கப்பாட்டில் இம்மூவருக்கும் பதவி வழங்கப்பட்டுள்ளது. ரவூப் ஹக்கீமுக்குப் பின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவம் யாருக்கு என்ற கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கும் போதே இம்மூவருக்கும் சமாந்தரமான இந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளது. அமைச்சர் நஸீர் அஹமட் ஏற்கனவே பிரதித்தலைவர் பதவி வகித்த போதும் கட்சியின் தீர்மானத்தை மீறி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்ததையடுத்து அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்.

அந்த இடத்துக்கு ஹிஸ்புல்லா உள்வாங்கப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது. எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மு.க. அபேட்சகராக ஹிஸ்புல்லா போட்டியிடவுள்ளார். கடந்த பொதுத் தேர்தலில் மு.க. சார்பில் போட்டியிட்ட நஸீர் அஹமட் வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது.

NEWS PLUS
WWW.NEWSPLUS.LK
2023 JANUARY 30 - MONDAY
Email: editor@newsplus.lk
FB: newsplustamil

## நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா காட்டியுள்ள முன்மாதிரி

உண்மையிலேயே நான் விலகிக் கொள்வதற்கு முடிவு செய்தது அடுத்த தேர்தலை எனக்கு வெற்றி கொள்வதற்கு முடியாது என்பதற்கல்ல. அடுத்த தேர்தலை நிச்சயமாக எனக்கு வெற்றி கொள்ள முடியுமென்பது எனது நம்பிக்கை. எனினும் அந்த சவாலை எதிர்கொள்ளவேண்டியது புதிய ஒரு குழு. நான் இங்கு வெளியேறுவது நானும் மனிதன் என்பதனை உணர்த்துவதற்கே. அரசியல்வாதிகளும் மனிதர்களே. உரிய காலம் வந்ததும் நாம் வெளியேறவேண்டும். அதற்கு நாம் தயாராகவேண்டும்.

நியூசிலாந்தின் பிரதமராக இருந்து விலகிச் சென்ற ஜெசிந்தா ஆடின் விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 44 வயதில் வெற்றி வாய்ப்புக்கள் இருந்தும் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவது மற்றவர்களுக்கு வாய்ப்பளிப்பதற்காகும். நியூசிலாந்தில் பிரபல்யமாக மக்கள் ஆதரவை பெற்றிருந்த ஜெசிந்தா இவ்வாறு தமது சந்தர்ப்பத்தை விட்டுக் கொடுத்து மற்றவர்களுக்கு வாய்ப்பளித்திருப்பது ஏனையோருக்கு ஒரு முன்னுதாரணமாகும்.

இலங்கையிலேயே இன்று பாராளுமன்றத்தில் இருப்பவர்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் 60–70 வயதிற்கு மேற்பட்டவர்களாவர். பாராளுமன்றத்துக்குச் சென்று சிலர் தூங்குவதையும் நம் அவதானிக்கின்றோம். சிலருக்கு நடந்து செல்ல முடியாத நிலை இருக்கின்றது. இளைய தலைமுறையினர் கேள்வி எழுப்புவது இவர்களை பற்றித்தான். இலங்கை போன்றதொரு நாட்டை வழிநடாத்த தலைமைத்துவம் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் ஜெசிந்தா இந்த முன்மாதிரியை காட்டியுள்ளார்.

பொதுவாக ஓய்வு பெறும் வயது 55 – 60 ஆகும். மூன்று முறை பிரதமர் பதவி வகித்த ஜெசிந்தா 44 வயதில் ஓய்வு பெற்று மற்றவர்களுக்கு முன்மாதிரி காட்டியுள்ளார். இலங்கையைப் பொறுத்தவரை 60 வயதுடன் ஓய்வு பெறுவது தான் வழக்கம். ஆனால் அரசியல் துறையில் அப்படியானதொரு நிலைமை இல்லாதிருப்பது கவலைக்குரியது. இன்றும் பாராளுமன்றத்தில் 70–80 வயதுக்கு மேற்பட்ட பலர் இருக்கிறார்கள். அவர்களுடைய அனுபவம் கடந்த காலங்களில் பிரயோசனமாக இருந்தது. ஆட்துணையில்லாமல் பாராளுமன்றத்துக்குக் கூட போக முடியாத நிலையில் சில அரசியல் தலைவர்கள் இருக்கிறார்கள். சில மாதங்களுக்கு முன் காலி முகத்திடலில் நடைபெற்ற அகரலைய போராட்டக் காரர்கள் இந்த நாட்டில் அரசியல் முறைமை மாற்றமொன்றை எதிர்பார்த்தே எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அந்தப் போராட்டம் காரணமாக முழு நாடும் ஸ்தம்பித்தது. அவ்வாறு ஸ்தம்பிப்பதற்கு காரணம் பெரும்பாலான மக்களின் ஆதரவு அரகலைக்குக் கிடைத்ததாகும். இதிலிருந்து அர்த்தப்படுவது நாட்டில் சிஸ்டம் சேர்ன்ஜ் முறைமை மாற்றமொன்றை மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதாகும்.

ஜெசிந்தா காட்டியுள்ள முன்மாதிரியை இன்று எல்லோரும் பேசுகின்றார்கள். ஜெனிந்தா அரசியலுக்கு ஓய்வு கொடுத்தது 44 வயதிலாகும். நாம் 44 வயதை எதிர்பார்க்காவிட்டாலும் குறைந்தது 60–65 வயதிலாவது ஓய்வு பெறுவது நமது நாட்டில் உருவாகவேண்டும். எதிர்கால அரசியல் துறை மாற்றங்களில் இது பரிசீலிக்கப்படவேண்டுமென்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.





**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# மனநலமும் ஆலோசனையும்



# பசி தீர்ப்போம்......!

பசி என்பது உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனின் பொதுவான உணர்வு. ஆனால் பசியை தணிக்கும் முறை மனிதனுக்கு மனிதன் மாறுபடும்.

சிலர் ஒரு நாளைக்கு மூன்று தடவைகள் அல்லது அதற்கு மேல் தரமான உணவுடன் வயிறு நிறைய சாப்பிடுவார்கள். சிலர் மிகவும் அரிதாகவே தரமான உணவை உண்கிறார்கள். பெரும்பாலான நேரங்களில் அவர்கள் பசியை அனுபவிக்கிறார்கள். இன்னும் சிலர் ஒருநாளில் ஒருமுறைகூட போதிய உணவு இன்றி சங்கடப் படுகிறார்கள்.

பசி என்பது உள, உடல், கல்வி, குடும்ப மற்றும் ஆன்மீக ரீதியில் பல பாதிப்புகளை ஏற்படுத்தும் பலம் கொண்டது. சமுதாயத்தில் உணவின்றி யாரும் பசியால் கஷ்டப்படக்கூடாது என்று நாம் அனைவரும் விரும்புகிறோம். பசித்தோருக்கு உணவளித்து அவர்கள் இது போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக விடாமல் பாதுகாப்பது ஒரு சமூக கடமை என்பதை நாம் உணர்ந்து இருக்கிறோம்.

இஸ்லாத்தில் மிகவும் வலியுறுத்தப்படும் செயல்களில் ஒன்று மற்றவர்களுக்கு உணவளிப்பதாகும்.

நமது நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியில் சரியான உணவு வேலைகள் கிடைக்காமல் பலர் அவதிப்படுவதை நாம் அறிவோம்.

அதிக பணவீக்கம், சந்தையில் உணவுப் பற்றாக்குறை, உணவு வாங்க போதிய வருமானம் இல்லாமை என்பன இன்று நமது சமூகத்தில் பலர் எதிர்கொள்ளும் மோசமான பிரச்சனைகளாகும்.

எனவே, உணவைப் பகிர்ந்துகொள்வது சமூகத்தை ஒன்றிணைப்பதற்கும் பாதிக்கப்படக் கூடியவர்களைக் கவனிப்பதற்கும் ஒரு சிறந்த வழியாகும்.

குறிப்பாக முஸ்லிம் சகோதரர்களாகிய எங்களிடம் நமது சகோதரர்களின் தேவைகளை கேட்காமலேயே பூர்த்தி செய்ய முயற்சிக்கும் இயல்பும் பழக்கமும் தாராளமாக உள்ளது.

நாம் இந்த உலகில் சமூக மனிதர்களாகப் படைக்கப்பட்டிருப்பதால், ஏழைகள் அல்லது தேவையுடன் வாழ்பவர்களுக்கு இயற்கையாகவே உதவி செய்யும் உணர்வு நமக்கு இருக்கிறது.

இன்று நம்மில் பலர் உணவு தேவைப்படுபவர்களுக்காக நேரடியாகவும் மறைமுகமாகவும் உணவைப் பகிர்ந்து கொள்வதை, பகிர்ந்து கொடுப்பதை அதற்கான ஏற்பாடுகள் செய்வதை பற்றி எல்லாம் கேள்விப்படுகிறோம்.

இறைவன் அவர்களுக்கு மேலான வெகுமதிகளை அளிக்க வேண்டும்.

இனங்காணப்பட்ட ஏழை எளியவர்களுக்கு உணவுகள் போய் சேருவது போன்று கேட்க முடியாமல் சங்கடப் படுபவர்கள் திரைக்கு பின்னால் இருக்கிறார்கள். அவர்கள் கேட்க வெட்கப்படலாம். அவர்களையும் அடையாளம் கண்டு இந்த பசி தீர்க்கும் பணியில் முடிந்த அனைவரும் ஈடுபட இறைவன் வாய்ப்புத் தரவும் வழிகாட்டவும் வேண்டும்.

---

# 13 ஐ அமுல்படுத்தலிலுள்ள அவசரம்

# தென்னிலங்கையின் சலசலப்பும் முஸ்லிம்களின் முணுமுணுப்பும்



சுஜப்,எம்,காசிம்

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி எடுத்துள்ள நடவடிக்கைகள், தென்னிலங்கையில் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியுள்ளதாக ஊடகங்கள் வாயிலாக அறியமுடிந்துள்ளது. சர்வகட்சி கூட்டத்தில் வைத்து ஜனாதிபதி இதைப்பகிரங்கமாக அறிவித்துள்ளமை சர்வதேசத்தின் அழுத்தத்திலிருந்து இனியும் தப்பிக்க முடியாது என்பதையும் வெளிப்படுத்தியுள்ளது. நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கான தீர்வுகள் மற்றும் உதவிகளை சர்வதேசத்திலிருந்து எதிர்பார்த்துள்ள ஜனாதிபதிக்கு இனியும் பொய் சொல்லி, சர்வதேசத்தை ஏமாற்ற முடியாத நிலைமைகளே ஏற்பட்டுள்ளன. அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள விஷேட அதிகாரங்களைப் பயன்படுத்தி, இந்த 13 அமுல்படுத்தப்படவுள்ளது. இதனால், இதில் எவ்வித சட்டச்சிக்கல்களும் ஏற்படப்போவதில்லை. மேலும், மாகாண சபைகளுக்கு அரசியலமைப்பு அனுமதித்துள்ள அதிகாரங்களையே ஜனாதிபதி வழங்கவுள்ளதால், பாராளுமன்றத்தால் இதைத் தடுத்து நிறுத்த முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு தடுத்த நிறுத்த முனைவதானால், தனிநபர் பிரேரணை ஒன்று பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படுவது அவசியம்.

இவ்வாறு ஒரு பிரேரணையைக் கொண்டுவந்து, சிறுபான்மையினரின் அரசியல் தீர்வுக்குத் தடையாக உள்ளதை வெளிப்படையாகத் தெரிவிக்க எந்தக் கட்சிகளும் விரும்பப்போவதும் இல்லை. மேலும், ஒரு பிரேரணையைக் கொண்டு வந்து, சர்வதேசத்தின் அபிலாஷைகளுக்குத் தடையாக அல்லது குறுக்காகச் செயற்பட்டால் பொருளாதார உதவிகள் தடைப்படும் ஆபத்துக்களும் உள்ளன. இதனால், நாடு இன்னும், அதலபாதாள நிலைக்குச் செல்வதை எவராலும் தடுக்க முடியாத நிலையே ஏற்படும். இது குறித்து சர்வ கட்சிக்கூட்டத்தில் மிகத் தெளி

வாகக் கருத்துரைத்த ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க, அரசியமைப்பின் 13 ஐ நிறைவேற்ற விரும்பாவிடின், இதை ஒழிப்பதற்கு தனிநபர் பிரேரணையைக் கொண்டுவாருங்கள் எனக் கோரியுள்ளமை, சமஷ்டித் தீர்வுக்கு தான், தயாரில்லை என்பதைக் காட்டியுள்ளதாகவும் அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது குறித்த ஆலோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி கோரியுள்ளதால், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் தலைமைகள் கூட்டாகச் சிந்தித்து ஒரு பொதுப் பிரேரணையைச் சமர்ப்பிப்பது அவசியம். இந்தத் திருத்தம் வடக்கையும், கிழக்கையும் இணைப்பதை வலியுறுத்துவதால், இம்மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களுக்கு அதிக பிரச்சினைகள் ஏற்படவுள்ளன. புலிகள் இருந்த காலத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளைப்போல் இல்லாவிடினும், காணி அதிகாரங்கள் வடகிழக்கு முஸ்லிம்களைப் பாதிக்கவே செய்யும். பெரும் நிலப்பரப்பில் அடுத்தடுத்ததாக உள்ள தமிழ், முஸ்லிம்களின் இருப்பிடங்கள், தொழில்தளங்கள், காணிகள் மற்றும் நிலவெல்லைகள் ஆயுத முனையில் அச்சுறுத்தி அபகரிக்கப்படாவிடினும் அதிகாரப்பலம் இன்னும் நிர்வாகக் கெடுபிடிகளால் இவை, பிடுங்கப்படும் நிலைமைகளே உள்ளன. எனவே, சிதறுண்டு திசைமாறிய முஸ்லிம் தலைமைகள் எல்லாம், தாயை நோக்கி குஞ்சுப்பறவைகள் கூட்டுக்குள் வருவதைப்போல் வரவேண்டியுள்ளது. இது, தேர்தல் கால ஆசைகளைப் போலன்றி, முஸ்லிம்களின் உயிர் மூச்சோடு ஒன்றுபட்ட வாழ்வியல் பிரச்சினை என்பதை முஸ்லிம் தலைமைகள் புரிந்து கொள்வது அவசியம்.

இணைந்த மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவதை பெரும்பாலான முஸ்லிம்கள் பொருட்படுத்தவில்லை. காரணம், கிழக்கில் தமிழ்பேசும் பொலிஸார் நூறுபேர் நியமிக்கப்படுகையில் 33 முஸ்லிம்களுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். காணி விடயம் அவ்வாறில்லை. அதிகாரத்துக்கு வரப்போகும் சக்திகளின் மனநிலைகளைப் பொறுத்தே இந்த ஆபத்துக்கள் ஏற்படப் போகின்றன.





# 2022ம் ஆண்டுக்கான கிரிக்கெட் உலகின் நாயகன் ஆனார் பாபர் அசாம்!



அப்ரித் வஸீர்

சர்வதேச கிரிக்கெட் பேரவை ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச போட்டிகளில் சிறப்பாக விளையாடி வரும் வீரர் மற்றும் வீராங்கனைகளை தெரிவு செய்து, அவர்களுக்கு விருது வழங்கி கௌரவித்து வருகின்றது. டெஸ்ட், ஒருநாள், வ20ஐ என மூன்று வகை கிரிக்கெட்டிலும் திறமைகளை வெளிப்படுத்திய வீரர்களுக்கு பல்வேறு பிரிவுகளுக்காக விருதுகள் வழங்கப்படுகின்றன.

அந்த வகையில், 2022ஆம் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர் மற்றும் 2022ஆம் ஆண்டின் சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரர் ஆகிய 2 விருதுகளையும் பாகிஸ்தான் அணித் தலைவர் பாபர் அசாம் தட்டிச் சென்றுள்ளார்.

கடந்த ஆண்டில் மூன்று வகையான கிரிக்கெட் போட்டிகளிலும் (டெஸ்ட், ஒருநாள், T20I) சேர்த்து 44 போட்டிகளில் ஆடிய அவர் 8 சதங்கள், 17 அரைச் சதங்கள் உட்பட 2,598 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதன் மூலம் கடந்த ஆண்டில் 2 ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் குவித்த ஒரே வீரராக இடம்பிடித்த பாபர் அசாமுக்கு ஐசிசியினால் 2022ஆம் ஆண்டிற்கான சிறந்த கிரிக்கெட் வீரர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, 2018 மற்றும் 2019 என தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் ஐசிசியின் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருதை இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் விராத் கோஹ்லி வென்ற நிலையில், தற்போது 2021 மற்றும் 2022 ஆகிய 2 ஆண்டுகளுக்கான ஐசிசியின் சிறந்த வீரர் விருதை பாபர் அசாம் கைப்பற்றி அசத்தியுள்ளார்.

அத்துடன் அவர் 2022ஆம் ஆண்டின் சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஐசிசியின் ஒருநாள் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் முதலிடத்தில் உள்ள 28 வயதான பாபர் அசாம், 2022இல் 9 ஒருநாள் போட்டிகளில் ஆடி 3 சதங்கள் மற்றும் 5 அரைச் சதங்களைப் பெற்று 679 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

இதன் மூலம் ஐசிசியின் ஆண்டின் சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரர் விருதை தொடர்ச்சியாக 2ஆவது தடவையாக அவர் பெற்றுக் கொண்டமை மற்றுமொரு சிறப்பம்சமாகும். ஏற்கனவே 2021ஆம் ஆண்டிலும் பாபர் அசாம் ஆண்டின் சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரர் விருதை பெற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதுமாத்திரமின்றி, கடந்த ஆண்டில் 26 வ20ஐ கிரிக்கெட் போட்டிகளில் ஆடிய பாபர் அசாம், ஒரு சதம், 5 அரைச் சதங்கள் அடங்களாக 735 ஓட்டங்களையும் குவித்தார். இதில் கடந்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற வ20 உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணியின் தலைவராக செயல்பட்டு அந்த அணியை இறுதிப் போட்டி வரை அழைத்துச் செல்வதிலும் பாபர் அசாம் முக்கிய பங்கு வகித்தார்.

இதனிடையே, கடந்த ஆண்டின் சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரராக இங்கிலாந்து அணித் தலைவர் பென் ஸ்டோக்ஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஜோ ரூட்டுக்குப் பிறகு இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவராக பென் ஸ்டோக்ஸ் நியமிக்கப்பட்டார். அவரது தலைமைத்துவத்தில் இங்கிலாந்து அணி ஆடிய 10 டெஸ்ட் போட்டிகளில் 9 வெற்றிகளை பெற்றுள்ளது. இதில் பாகிஸ்தான் மண்ணில் முதல் முறையாக அந்த அணியை டெஸ்ட் தொடரில் வெள்ளையடிப்புச் செய்து வரலாற்று சாதனை படைத்தது

அதுமாத்திரமின்றி, 2022ம் ஆண்டில் டெஸ்ட் கிரிக்கெட்டில் அபாரமாக ஆடி 870 ஓட்டங்களையும் குவித்தார். துடுப்பாட்டம், பந்துவீச்சு மட்டுமல்லாது கடந்த ஆண்டில் தலைவராகவும் அசத்தியதன் விளைவாக, 2022ஆம் ஆண்டின் சிறந்த டெஸ்ட் வீரருக்கான ஐசிசி விருதை பென் ஸ்டோக்ஸ் வென்றுள்ளார்.

இதேவேளை, இங்கிலாந்து மகளிர் கிரிக்கெட் அணியின் தலைவர் நாட் சிவெர் கடந்த ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீராங்கனை மற்றும் சிறந்த ஒருநாள் போட்டி வீராங்கனை ஆகிய இரட்டை விருதுகளை தட்டிச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.




# இந்தோனேசியா - இலங்கை நட்புறவுச் சங்க உறுப்பினர்களின் வருடாந்த நிகழ்வு







(அஷ்ரப் ஏ சமத்)

இந்தோணசியா - இலங்கை நட்புறவுச் சங்கத்தின் உறுப்பினர்களது வருடாந்த இரவு நிகழ்வுகள் இந்தோணிசியா கொழும்பு தூதுவர் ஆலயத்தில் தூதுவர் தேவி குர்ஸிட்டினா தெபிங் தலைமையில் சனிக்கிழமை 28 நடைபெற்றது.

இந் நிகழ்வில் இலங்கை - இந்தோணிசியா நாடுகளின் கலை கலாச்சார நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டன. இரு நாடுகளின் நட்புரவுச் சங்கத்தின் நூற்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இந் நிகழ்வுகளில் கலந்து கொண்டார்கள். இந்தோணிசிய கலை , கலாச்சார இசை நடனம் நிகழ்வுகளும் இங்கு இடம்பெற்றன. அத்துடன் ஒன்று கூடல் நிகழ்வில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற உறுப்பினர்களுக்கு தூதுவரினால் பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் இலங்கை -இந்தோணிசியா நட்புரவுச் சங்கத்தின் 30 வருடங்கள் பூர்த்தியும் இலங்கையில் இந்தோணியாவின் இராஜதந்திர உறவு ஆரம்பிக்கப்பட்டு 70 வருடங்களைப் பூர்த்தியடைவதாகவும் தூதுவர் அங்கு தெரிவித்தார்.

மேலும் தூதுவர் அங்கு உரையாற்றுகையில் இலங்கையில் கடந்த வருடம் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியான காலகட்டத்தில் இந்தோணிசியா மருந்துப் பொருட்களையும் இந்தோணியர்கள் அவுஸ்திரேலியா கனடா நாடுகளில் இருந்து இலங்கைகு அனுப்பிய 2000க்கும் அதிகமான குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்களையும் அன்பளிப்பு செய்தன. இப்பொருட்கள் கொழும்பு ஹம்பாந்தோட்டை, கண்டி ஆகிய பிரதேசங்களில் வாழும் மூவினங்களுக்கும் உலர் உணவுப் பொதிகளை பகிர்ந்தளிக்கப்பட்டதாகவும் இந்தோனோசியத் தூதுவர் அங்கு கூறினார்.



# எல்லலமுல்ல ஸாஹிரா முஸ்லிம் வித்தியாலய வரலாற்றில் முதற்தடவையாக புலமையில் 04 பேர் சித்தி!





மேல் மாகாணம் கம்பஹா மாவட்டத்தில் கவியரசியும் அதிபருமான திருமதி எஸ். ஏ. இஸ்மத் பாத்திமா அதிபராக இயங்கிக் கொண்டிருக்கும் எல்லலமுல்ல ஸாஹிரா முஸ்லிம் வித்தியாலயத்தில் 2022 தரம் 5 புலமைப் பரீட்சையில் பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாக 04 பேர் சித்தியடைந்துள்ளனர்.

பாடசாலையிலிருந்து பரீட்சை எழுதிய 26 மாணவர்களில் நான்கு பேர் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

S.F. MANHA. 152
M.M.A. WALEEDH I5I
M. R.F. MANAL. 147
M-R. HAFSA. 145

இந்த நான்கு மாணவர்களுக்கும் மற்றும் அனைத்து மாணவர்களுக்கும் கற்றுக் கொடுத்த ஆசிரியை திருமதி. ஆ.ளீ. உயுளுயு ஆவார். இது தவிர இன்னும் பல ஆசிரிய ஆசிரியைகளும் இந்த மாணவர்களுக்காக பாடுபட்டமை குறிப்பிடத்தக்கது. பாடசாலை. வரலாற்றில் ஒரே தடவையில் நான்கு மாணவர்கள் சித்தியடைந்தமை இதுவே முதற் தடவையாகும்.

பாடசாலைக்கு இந்தப் பெறுபேற்றினை பெற அருள் புரிந்த இறைவனுக்கும் கடமையாற்றிய அனைத்து ஆசிரிய ஆசிரியைகள் மற்றும் சமூக சேவை நிறுவனங்கள், கல்விப் பணிமனை, உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர் அனைவர்களுக்கும் பாடசாலை சார்பாக பாராட்டுக்களையும் நன்றிகளையும் அதிபர் அவர்கள் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

கடந்த 26/01/2023 அன்று பாடசாலையில் அதிபர் திருமதி எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா தலைமையில் நடைபெற்ற டுயபெரயபந னுயல -2022 மொழிகள் தினத்தின் போது வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ஆசிரிய ஆலோசகர் அஷ்ஷேய்க் எம்.எச்.எம்.புஹாரி அதிபர் மற்றும் வகுப்பாசிரியை திருமதி எம்.என்.பி.ஹஸ்னா ஆகியோர் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படுக் காணலாம்.

26 மாணவர்கள் பரீடசைக்கு விண்ணப்பித்து பரீட்சையை எழுதி நூற்றுக்கு மேல் 17 மாணவர்கள் எழுபது புள்ளிகளுக்கு மேல் 23 மாணவர்களும் பெற்றமை சிறந்த பதிவாக அமைகின்றது.

# பூகொட குமாரிமுல்லையில் நூற்றாண்டு விழா ஒன்றுகூடல்

பூகொட குமாரிமுல்லை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 1993 சாதாரண தர மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 1993 முதல் 2003 வரை உள்ள 10 வருட மாணவர்களின் விசேட ஒன்றுகூடல் எதிர்வரும் பெப்ரவாரி 4ம் திகதி பூகொட குமாரிமுல்லை முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 8 மணியளவில் ஆரம்பிக்கப்படவுள்ள ஒன்றுகூடல் நிகழ்வில் பூகொட குமாரிமுல்லை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற 1993 முதல் 2003 வரை உள்ள, மாணவ மாணவிகள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்வில் இப்பத்து வருடங்களுக்குள் பாடசாலையில் கல்வி கற்பித்த அதிபர்கள் ,ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர் பழைய நினைவுகளை மீட்டிப்பார்க்கவுள்ளதோடு சுவாரஸ்யமான போட்டிகளும் , கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. இந்த ஒன்றுகூடல் நிகழ்சிகளை 93ம் வருட பழைய மாணவர்கள் சங்கம் ஏற்பாடு செய்கின்றனர்.

(இர்பான் ஹனீபா)